# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2023

10 - ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

பகுதி - I

I குறிப்பு : 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 2. கொடுக்கப்பட்ட நான்கு விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 14 X 1 = 14

1. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையை செய்து கொண்டது?
   அ) ஜெர்மனி ஆ) இரஷ்யா இ) போப் ஈ) ஸ்பெயின்
2. ***சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.***
   i) துருக்கிய பேரரசு பால்கனில் துருக்கியரல்லாத பல இனங்களைக் கொண்டிருந்தது.
   ii) துருக்கி மைய நாடுகள் பக்கம் நின்று போரிட்டது.
   iii) பிரிட்டன் துருக்கியைத் தாக்கி கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றியது.
   iv) சூயஸ் கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.
   அ) i, ii, ஆகியன சரி ஆ) i, iii ஆகியன சரி இ) iv சரி ஈ) i, ii, iv ஆகியன சரி
3. 'சத்யார்த்த பிரகாஷ்' எனும் நூலின் ஆசிரியர் ........
   அ) தயானந்த சரஸ்வதி ஆ) அயோத்தி தாசர் இ) அன்னி பெசன்ட் ஈ) சுவாமி சாரதாநந்தா
4. முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?
   அ) 1858 ஆ) 1911 இ) 1865 ஈ) 1936
5. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் ..........
   அ) ஊட்டி ஆ) ஆனைமுடி இ) கொடைக்கானல் ஈ) ஜின்டாகடா
6. உலகிலேயே மிக நீளமான அணை ..........
   அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை இ) ஹிராகுட் அணை ஈ) பக்ராநங்கல் அணை
7. இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம் .........
   அ) குஜராத் ஆ) இராஜஸ்தான் இ) மகாராஷ்டிரம் ஈ) தமிழ்நாடு
8. தமிழ்நாட்டில் அதிகமான அளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் .........
   அ) இராமநாதபுரம் ஆ) நாகப்பட்டினம் இ) கடலூர் ஈ) தேனி
9. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகளை நியமிப்பவர் ........ .
   அ) குடியரசுத்தலைவர் ஆ) மாநில கணக்காயர் இ) ஆளுநர் ஈ) பிரதம மந்திரி
10. மாநில சபாநாயகர் ஒரு .........
    அ) மாநிலத் தலைவர் ஆ) அரசின் தலைவர்
    இ) குடியரசுத் தலைவரின் முகவர் ஈ) மேற்கண்ட எதுவும் இல்லை
11. இன ஒதுக்கல் கொள்கை என்பது .........
    அ) ஒரு சர்வதேச சங்கம் ஆ) இராஜ தந்திரம்
    இ) ஒரு இனப் பாகுபாட்டுக் கொள்கை ஈ) மேற்கூறிய எவையுமில்லை
12. முதன்மைத்துறை இதனை உள்ளடக்கியது .........
    அ) வேளாண்மை ஆ) தானியங்கள் இ) வர்த்தகம் ஈ) வங்கி
13. காட் (GATT) ன் முதல் சுற்று நடைபெற்ற இடம் .........
    அ) டோக்கியோ ஆ) உருகுவே இ) பராகுவே ஈ) ஜெனிவா
14. உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்ட ஒரே மாநிலம் .........
    அ) கேரளா ஆ) ஆந்திர பிரதேசம் இ) தமிழ்நாடு ஈ) கர்நாடகா

பகுதி - II

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28-க்கு கட்டாயமாக விடையளிக்க.** 10 X 2 = 20

15. ஐரோப்பிய போர்க் குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் யாவை?
16. 'டாலர் ஏகாதிபத்தியம்' - தெளிவுபட விளக்குக.
17. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.
18. வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடவும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

19. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.
20. 'பருவமழை வெடிப்பு' என்றால் என்ன?
21. இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக.
22. இயற்கை எரிவாயு என்றால் என்ன?
23. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?
24. உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?
25. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
26. கருப்பு பணம் என்பதன் பொருள் என்ன?
27. FAO -ன் படி உணவு பாதுகாப்பை வரையறு.
28. உலகமயமாக்கல் என்றால் என்ன?

## பகுதி - III

**குறிப்பு : எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 10 X 5 =50

29. ***கோடிட்ட இடத்தை நிரப்புக.***
    i) ......... என்பது தொலைவிலிருந்தே எதிரிகளின் போர் விமானங்களை கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி.
    ii) ஜெர்மனி நேட்டோவில் ....... ஆம் ஆண்டு இணைந்தது.
    iii) சாத்தனூர் அணை ........ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
    iv) இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள் ........
    v) இந்தியாவில் ......... துறை முதன்மைத் துறையாகும்.
30. முதல் உலகப் போருக்கான முக்கிய காரணங்களை விவரி.
31. நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூக நீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும்.
32. 1857 - ம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
33. ***வேறுபடுத்துக.***
    i) வானிலை மற்றும் காலநிலை ii) வண்டல் மண் மற்றும் கரிசல் மண் காரணம் கூறுக.
    iii)கடலூர் ஒரு பல்வழி பேரழிவு மண்டலம் காரணம் கூறு.
34. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக..
35. தமிழ்நாட்டில் உள்ள மண் வகைகளின் பரவல் பற்றி விளக்குக.
36. பல்நோக்கு திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்குத் திட்டங்களைப் பற்றி எழுதுக.
37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
38. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள் யாவை?
39. GST - யின் அமைப்பை விளக்குக.
40. GDP - ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.
41. 1930 ம் ஆண்டு முதல் 1950 ம் ஆண்டு வரையிலான ஏதேனும் ஐந்த நிகழ்வுகளுக்கு காலக்கோடு ஒன்று வரைக. (இந்திய தேசிய இயக்கம்)
42. கொடுக்கப்பட்டுள்ள இந்திய புறவரி வரைபடத்தில் கீழ்காண்பனவற்றைக் குறிக்கவும்.
    i) டெல்லி ii) கான்பூர் iii) பாரக்பூர் iv) ஜான்சி v) குவாலியர்

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.** 2 X 8 = 16

43. கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீர போர் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
    ***(அல்லது)***
    காந்தியடிகள் ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும்.
44. **கொடுக்கப்பட்டுள்ள இந்திய புறவரி வரைபடத்தில் கீழ்காண்பனவற்றைக் குறிக்கவும்.**
    i) ஆரவல்லி ii) தக்காணபீடபூமி iii) காரக்கோரம் iv) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை
    v) கரிசல் மண் காணப்படும் பகுதி vi) நெய்வேலி
    vii) 50 செ.மீக்கும் குறைவான மழைபெறும் பகுதி
    viii) ஏதேனும் ஒரு கிழக்கு கடற்கரை துறைமுகம்.
    ***(அல்லது)*** கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு புறவரி வரைபடத்தில் கீழ்காண்பனவற்றை குறிக்கவும்.
    i) நீலகிரி ii) சோழ மண்டல கடற்கரை iii) மன்னார் வளைகுடா
    iv) பழவேற்காடு ஏரி v) காவிரி ஆறு vi) முதுமலை வன விலங்கு சரணாலயம்
    vii) மாங்குரோவ் காடுகள் vii) வங்காள விரிகுடா



-E.VIKRAM (M.Sc.,B.Ed(Mathematics))
Now I am Working in Orange International Matriculation Hr. Sec. School., Aagaram Village ,Vinnamangalam Post , Aagaram Village , Vinnamangalam Post , Arni -632316.,Tiruvannamalai district.
& Sri Rajalakshmi Tuition Centre., Arni -632316.,Tiruvannamalai district.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com